International Refereed Journal of Tamil Studies Research (IRJTSR) E-ISSN: 2582-5313

தமிழ் ஆய்வு ஆராய்ச்சியின் சர்வதேச நடுவர் இதழ் (ஐ.ஆர்.ஜே.டி.எஸ்.ஆர்)

Volume: 01 Issue: 01 July to September 2019 www.irjtsjournal.org

# அகநானூற்றில் கற்பு

முனைவர் பி. சோழமுத்து,

*உதவிப்பேராசிரியர், தமிழ்த்துறை,*

*மீனாட்சி சந்திரசேகரன் மகளிர் கலை அறிவியல் கல்லூரி,*

*கரம்பயம், பட்டுக்கோட்டை.*

பண்டைத் தமிழர்கள் அகவாழ்க்கையை களவு, கற்பு என இருநிலைகளாகப் பகுத்தனர். களவு என்பது சமூகத்தில் பிறர் அறியா வண்ணம் மேற்கொள்ளப்படும் வாழ்வு எனவும் கற்பு என்பது சமூகத்தின் அனுமதியோடு வெளிப்படையான வாழ்க்கையைக் கொள்வதாகவும் அமைகிறது. கற்பு என்னும் சொல்லுக்கு இலக்கண நூல்களும் உரையாசிரியர்களும் அறிஞர்களும் கூறும் விளக்கம் அதன்வழி அகநானூற்றுப் பாடல்களில் அறியப்படும் கற்பு வாழ்க்கையை எடுத்தியம்புவதாக இக்கட்டுரை அமைகிறது.

**கற்பின் மதிப்பு**

கற்பு என்ற சொல்லின் மதிப்பு காலத்திற்குக் காலம் மாறிக்கொண்டே வந்துள்ளது. ஆதிமனிதன் கற்பை மாந்திரீக மதிப்புடையதாகக் கருதினான். நாகரிகமடைந்த மக்கள் கற்பை உயர்ந்த அறமாகப் போற்றுகின்றனர். ஆதிமனிதன் வளமையாய்ப் போற்றிய கற்பினின்றும் மாறுபட்ட இயற்கைக்கு முரணான திணிப்பே பிற்கால கற்பு என்று கூறலாம்.

**தொல்காப்பியத்தில் கற்பு**

கற்பு என்பது இல்லறவொழுக்கமாகும். கற்பிக்கப்படுவது கற்பு, கற்பெனப்படுவது உயரிய ஒழுக்கம். பிறர் நெஞ்சம் புகாமை என்று பல்வேறு விளக்கங்களைக் கற்புக்குக் காட்டுவது அறியத்தக்கது.

**கற்பு என்பதற்கு,**

“மகளிர்நிறை, இல்லறவொழுக்கம், நீதிநெறி, முறைமைவிதி, கல்வி, கற்பனை, மதில், மதிலுண்மேடை, முல்லைக்கொடி”[1] போன்ற பல பொருள்களைக் கணலாம்.

“களவு கொண்டு விடுதற்குறியது. கற்பு கைக்கொள்ளுதற்குரியது என்று களவின் நிலையாமையையும் கற்பின் மூலம் கற்பு வாழ்க்கைக்குக் களவு நல்ல தோற்றவாய்”[2] என்று உணரமுடிகிறது.

“கற்பெனப் படுவது கரணமொடு புணரக்

கொளற்குறி மரபின் கிழவன் கிழத்தியைக்

கொடைக்குரி மரபினோர் கொடுப்பக் கொள்வதுவே”[3]

என்னும் தொல்காப்பிய நூற்பா கொள்ளுதற்குரிய தலைவன், கொடுத்தற்குரிய மரபினோர் கரணவழி நின்று தலைவியைக் கொடுக்கக் கொள்ளும் சடங்குவழிப்பட்ட மணநிகழ்வே கற்பு என்று வரையறுக்கிறது. மறை வெளிப்படுத்தல், தமரிற்பெறுதல், மகிழ்தல், புலத்தல், ஊடல்தீர்தல், பிரிதல் என்று கற்புக் கால நிகழ்வுகளை,

"மறை வெளிப்படுத்தலும் தமரின் பெறுதலும்

இவை முதலாகிய இயல் நெறி திரியாது

மலிவும் புலவியும் ஊடலும் உணர்வும்

பிரிவொடு புணர்ந்தது கற்பெனப் படுமே"[4]

தொல்காப்பிய நூற்பா எடுத்துரைக்கிறது.

**கற்பு பொருள்**

ஈ.கோ. பாஸ்கரதாஸ்,"கற்பு என்ற சொல்லைக் கல்+பு என்று பிரித்துக் கல் என்ற பகுதிக்குக் கற்றல், தோண்டுதல், கல் என்று மூன்று பொருள்கள் இருப்பதைக் கூறுகிறார். கற்றலாவது வாழ்வுக் கலையைக் கற்றல் என்றும் தோண்டுதலாவது உள்ளத்து உணர்வுகளைப் பண்பட்ட நிலையில் வெளிக்கொணர்வது என்றும் கல்லாவது ஊசலாடா உறுதிநிலை என்றும் கூறி மூன்று நிலைகட்கும் மக்களை நெறிபடுத்த வல்லதே திருமணம் என்றும் அவர் விளக்குகிறார். "[5]

இவர்தம் கருத்து பொதுவாகக் கூறப்பட்டதாக அமைகிறது. இறுதியிற்கூறிய ஊசலாடா உறுதிநிலையைச் சமூகவியல் நோக்கில் நுணுகிப் பார்த்தால் முதல் இரண்டு கருத்துக்களும் ஆடவர், பெண்டீர் என்ற இருபாலர்க்கும் இயைந்து வருவது போல் அது பொருந்தாமல் போவதும் பெண்டீர்க்கு மட்டுமே கற்புத்திட்டம் வற்புறுத்தப் பட்டதாக தெரிகிறது.

**கற்புத் திறம்**

இல்லற ஒழுக்கம் அன்பினால் நிகழாது விட்டால் பெரும் கேடு உண்டாகுமென பழந்தமிழர் நினைத்தனர். ஏனென்றால் ஓர் ஆண்மகனும் ஒரு பெண் மகளும் தம்முள் ஒருவரையொருவர் உயிர்போல கருதி மிகுந்த அன்பினால் ஒழுகினாலன்றிப் பெண்களுக்குக் கற்பொழுக்கம் நிலை பெறாது.

கற்பொழுக்கம் நிலை பெறாவிடில் நன்மக்களைப் பெறுதல் இயலாது. உலகில் ஒருவரோடொருவர் அமைதியாய் இருந்து வாழா பகையும் சினமும் கொண்டு அல்லலுறுவர்.

தலைவி தலைவனை விட்டுக் களவில் மட்டுமின்றி கற்பு வாழ்க்கை நடக்கும் போதுகூடப் பிரிந்திருக்கமாட்டாள். அதை அவள் விரும்பாள் என்பதை தலைவன் தோழிக்கு உணர்த்துவதை,

"பாவை மாய்த்த பனிநீர் நோக்கமொடு " (அகம். பா. 5)

என்ற பாடல்வரி மூலம் அறியலாம்.

இதிலிருந்து தன் பயணத்தை அப்போதைக்கு நிறுத்தியிருந்தாலும் தலைவன் ஒரேயாக வீட்டில் தங்கிவிடுவதில்லை. மீண்டும் அவன் தலைவியிடம் இல்லறத்திற்கு வேண்டிய பொருளீட்டும் வினையாற்றுதலே ஆடவர்க்கு உயிர் என்று கூறிப்பிரிய முற்படுகிறான்.

**கற்பெனப்படுவது சொற்றிறம்பாமை**

மு. வரதராசனார்,“கற்புக்குச் சொன்ன சொல் மாறா நிலையையே பொருளாகக் கொள்கிறார். முல்லைநில வாழ்வோடு கற்பைப் பொருத்திப் பார்க்கும் அவர்,வினைவயிற் பிரியும் தலைவன் கடைமையை முடித்துவிட்டுக் குறித்த காலத்திற்குள் திரும்புவதாகவும் மனைவயின் இருக்கும் தலைவி அவன் வரும்வரை கலங்காமல் ஆற்றியிருப்பதாகவும் உறுதி கூறுவதை எடுத்துக்காட்டி இருவரும் இருவகைச் சொற்களால் கட்டுப்பட்டுச் சொன்னசொல் தவறாமல் நடப்பதே கற்பு என்று வரையறுக்கிறார். ”[6]

வினைமுற்றி மீள்பவன் கார்காலத்தில் வருவதாகச் சொல்லி வராமல் இருந்ததும் உடனே வருவதாகச் சொன்னவன் வராமல் நெடுங்காலம் தாழ்த்தியமையும் பாடல்களால் உணரப்படுகின்றன.

“கருவிக் கார்இடி இரீஇய

பருவம் அன்று,அவர் வருதும்என்றதுவே, ” (அகம். பா. 139)

“இன்இள வேனிலும் வாரார்,

இன்னே வருதும், எனத்தெளித் தோரே” (அகம். பா. 229)

என்ற பாடலடிகள் சொன்னசொல் காவானாய்த் தலைவன் காலம் தாழ்த்தியதைக் குறிப்பிடுகின்றன.

ஆற்றியிருப்பதாகக் கூறும் தலைவியின் ஆற்றாமை மீதூர்ந்த நிலை பல பாடல்களில் காட்டப்படுகின்றது.

பொருளீட்டும் பொருட்டுத் தலைவன் தலைவியைப் பிரியக் கருதினான். அதனை தோழி தலைவிக்குக் கூற ஆற்றாமையால் தலைவன் நம்மைப் பிரிந்து செல்வாரானால், நமது பெண்மை நலத்தினை நுகர்ந்து அவரால் கைவிடப்பட்ட பாழாய்ப்போன இம்மேனியைக் காமநோய் மேலும் வருத்துவதாலே வலிமையற்றுத் தானே உடைந்து அழியும் உள்ளத்துடன் அவர் புணர்தலை விரும்பி, கடும்பனியால் வருந்தி நடுக்கம் கொள்வதை,

“அகன்றுஉறை மகளிர் அணிதுறந்து நடுங்க,

அற்சிரம் வந்தன்று; அமைந்தன்று இதுஎன,

எப்பொருள் பெறினும், பிரியன்மினோ எனச்

…………………………………………...

பாழ்படு மேனிநோக்கி நோய்பொர,” (அகம். பா. 217)

என்னும் பாடல்வரிகள் மெய்ப்பிக்கின்றன.

தலைவன் வினைவயிற் பிரிந்தமையைத் தோழி தலைவியின்பாற் கூற, தலைவி கடந்து செல்வதற்கு நெடிய காட்டிலே தன் கணவனைத் தேடிச் சென்ற வெள்ளிவீதி என்பவளைப் போல யானும் என் தலைவனைச் தேடிச் செல்ல விரும்பியதை,

“நெறிபடு கவலை நிரம்பா நீளிடை,

வெள்ளி வீதியைப் போல நன்றும்

செலவுஅயர்ந் திசினால் யானே'' (அகம். பா. 147)

என்னும் பாடல்வரிகள் உறுதிப்படுத்துகின்றன.

கற்பு என்பதற்குச் சொன்ன சொல் காக்கும் நிலை என்று இருபாலார்க்கும் பொதுவாகப் பொருந்திக் கொண்டு பொருள்கூற முற்படுவதால் சங்கால நடைமுறைக்கு முரண்பட்ட செய்திகளால் இடர்ப்பட நேருகிறது.

**கற்பு கட்டுப்பாடு**

''பெண்களின் அதிகாரம் சிறிது சிறிதாக ஆடவர்கைக்கு மாறியபோது பெண்களைக் கட்டுப்படுத்துவனவும் அவர்களைக் கட்டியாள்வனமாகிய சமூகக் கட்டுபாடுகளை ஆடவர் உண்டு பண்ணுவர்.''[7] என்று குறிப்பிடும் ந.சி. கந்தையா மனைவி கணவனுக்கு அடங்கி நடத்தலோடு,''கணவனையொழித்த பிற ஆடவரோடு சேர்க்கை வைத்திருத்தல் கூடாது என்னும் கட்டுப்பாட்டைக் கடைப்பிடித்தொழுகுதலே கற்பு என்று வரையறுக்கிறார்.''[8]

**அடிமைப்படுத்தல்**

''பெண்களின் விருப்பு வெறுப்புகளை எண்ணிப் பார்க்காமல், அவர்களின் மீது திணிக்கப்பட்ட கட்டுப்பாடே கற்பாகிறது. உடைமைச் சமூகம் பெண்களை அடிமைகள் போல், பரிவர்த்தனைப் பொருள்கள் போல் நடத்தியதை''[9] சோ. இலக்குமிரதன் பாரதியும் எடுத்துக் கூறுகிறார். பெண்கள் தம் உரிமையிழந்து ஆண்களுடைய சொத்துக்களாவது போலவே அவர்களுடை காம இன்பத்திற்கும் இனப்பெருக்கத்திற்கும் பணிகள் புரிவதற்கும் உரிய பொருட்களாகும் காலத்தில் குலத்தொகுதியினர் பெண்களைக் கைப்பற்றும் அல்லது கைம்மாறும் பொருளாகக் கொண்டமையை அவர் விளக்குகிறார்.

**முல்லையும் கற்பும்**

முல்லைத்திணையில் கால்நடை வளர்ப்பைத் தொழிலாகக் கொண்ட ஆயர் வாழ்ந்ததால், கற்பு இத்திணையில் கால் கொண்டிருக்க வாய்ப்பிருக்கிறது.

''முல்லை சான்ற கற்பு'' (நற். பா. 142)

என்னும் பாடல்வரி இங்கு குறிப்பிடத்தக்கது. இருத்தல் என்ற முல்லைநில உரிப்பொருளுக்கும் ஆழ்ந்த பொருளுண்டு. கணவனைப் பிரிந்திருக்கும் காலத்தில் பெண் தன் உணர்ச்சிகளை அடக்கிக் கொண்டு இருத்தல், பிற ஆடவர்பால் நாட்டம் செலுத்தாது இருத்தல், இல்வரை இகவாது இருத்தல், என்ற பல்வேறு பொருட்களை உள்ளடக்கியதே முல்லைத்திணையின் இருத்தல் ஆகும்.

பகைவருக்கு அச்சம் தரும் காவல் மிகுந்த முதுமையான ஊரிலுள்ள செல்வம் மிக்க மாளிகையில் நம்மை வெறுத்து வாழ்ந்து கொண்டிருக்கும் அடங்கிய குற்றமற்ற கற்பினையும், குளிர்ச்சிப் பொருந்திய கண்ணினையும் மூங்கிலை ஒத்த பருத்த தோளினையும் உடைய தலைவியைக் காண எண்ணியதை,

''அருங்கடிக் காப்பின், அஞ்சு வரு, மூதூர்த்

திருநகா் அடங்கிய மாசுஇல் கற்பின்,

அரிமதா் மழைக்கண் அமைபுரை பணைத்தோள்,

அணங்குசால், அரிவையைக் காண்குவம்-

பொலம்படைக் கலிமாப் பூண்ட தேரே,'' (அகம். பா. 114)

என்னும் பாடல்வரிகள் இல்வரை கடவாத கற்புத் திட்பத்தைக் குறிப்பிடுகிறது.

குளிர்ச்சிப் பொருந்திய மணங்கமழும் காட்டின் கண் நறுமணம் உடைய முல்லை மலா்களைச் சுடுவதற்கு அமைந்த கற்பினை உடைய தலைவி வாழும் ஊா் அமைந்திருப்பதை,

''தண்நறும் புறவி னதுவே - நறுமலா்

முல்லை சான்ற கற்பின்

மேல்இயற் குறுமகள் உறைவுஇன் ஊரே'' (அகம். பா. 274)

என்னும் பாடல்வரிகள் கற்புக்கும் முல்லைத்திணைகும் உள்ள தொடா்பை உணா்த்துகிறது.

**கடவுள் கற்பு**

கற்பு என்பது தெய்வத்தன்மை பொருந்தியது என்பதை,

''கடவுட் கற்பொடு குடிக்கு விளக்கு'' (அகம். பா. 184)

''கடவுட் கற்பின் மடவோள் கூற'' (அகம். பா. 314)

என்னும் பாடல்கள் கற்புக்குத் தெய்வத்தன்மை அடையாகக் கொடுக்கப்பட்டுள்ளது. செயற்கரிய செயல் என்பதாலேயே கற்பிற்கும் புனிதத்தன்மை ஏற்றப்பட்டது.

**கற்பும் நாணமும்**

''உயிரினும் சிறந்தன்று நானே நாணினும்

செயிா்தீா் காட்சிக் கற்புச் சிறந்தன்று''[10]

என்னம் தொல்காப்பிய நூற்பா நாணின் சிறப்பையும் நாணத்தைவிடக் கற்புச் சிறந்ததையும் விளக்குகின்றன.

தலைவனைப் பிரிந்திருக்கும் தலைவி தன் காதல் உள்ளம் வீட்டில் இருப்பவா்களுக்குப் புலப்படாமல் மறைத்துக் கொண்டு, கிளியுடன் மெல்லப் பேசிக் கொண்டிருப்பதைக் கூறும் தலைவன் அவளைச் சிறப்பிப்பதை,

''செந்தாா்ப் பைங்கிளி முன்கை ஏந்தி,

இன்று வரல் உரைமோ சென்றிசினோா் திறந்து, என

இல்லவர் அறிதல் அஞ்சி, மெல்லென

முழலை இன் சொல் பயிற்றும்

நாணுடை அரிவை மாண் நலம் பெறவே” (அகம். பா. 34)

என்ற மதுரை மருதன் இளநாகனாரின் பாடல்வரிகளால் அறியலாம். இவ்விடத்தில் நாணத்தால், மற்றவர் கேட்டுவிடக் கூடாதே என்று அஞ்சும் தலைவியின் நிலை பெண் இப்படியெல்லாம் இருக்கவேண்டும் என்று விதிக்கப்பட்டிருப்பதை உணர்த்துகின்றது.

**தோழி ஆற்றுவித்தல்**

தோழியானவள் தலைவியை நோக்கி ஆறலைக் கள்வர்கள் நுனியில் இரும்பு புனைந்த தமது அம்பைத் தீட்டிச் செப்பம் செய்வதற்காக நுனியை நகத்தால் நெருடுவர் அப்போது ஒருவகை ஓசை உண்டாகும். அந்த ஓசையைப் போல சிவந்த கால்களை உடைய ஆண் பல்லியானது ஓசையெழுப்பித் தன் துணையாகிய பெண் பல்லியை அழைக்கும். கள்ளிக் காட்டைக் கடந்து சென்றதும் தலைவர் அங்கு அப்பல்லியின் ஓசையைக் கேட்டு அதன் காதலை உணர்ந்து உன்னை நினைக்க மாட்டாரோ, உன்னை நினைத்து விரைவில் மீண்டும் வருவார். கவலை கொள்ளாதே என்று கூறி தலைவியை ஆற்றுவிப்பதை,

“கள்ளி முள் அரைப் பொருத்தி செல்லுநர்க்கு

உறுவது கூறும் சிறுநெந் நாவின்

மணிஓர்த் தன்ன தெண்குரல்

கணிவாய், பல்லிய காகுறந் தோரே!” (அகம். பா. 151)

என்னும் பாடல்வரிகள் உறுதிப்படுத்துகின்றன. தோழியின் துணை களவுக் காலத்திற்கும் மட்டுமின்றி கற்புக்காலத்திற்கும் உறுதுணையாக நின்றதை அறியமுடிகிறது.

**பொருள் மேல் வெறுப்பு**

ஆடவன் பல இடங்களுக்கும் சென்று ஈட்டி வந்த பொருளே கற்பு என்னும் கட்டுப்பாட்டைக் கொண்டு வந்ததால் பெண்டிர்க்குப் பொருளின் மேல் வெறுப்பு ஏற்படுகிறது. செல்வச்செழிப்பு, பரத்தையரை நாடிச் சென்றபோது அவ்வெறுப்பு மேலும் வளர்ந்தது.

இல்லற இன்பத்தை நுகரத்துடிக்கும் பெண்ணும் பொருளில் மயங்கிப் போலி மதிப்புக்காகப் புறம்போகும் ஆணும் முரணிக் கொள்ளும் நிலை அகநானூற்றுப் பாலைப் பாடல்களில் இடம்பெறுகிறது.

“பொருளே காதலர் காதல்:

அருளே காதலர் என்றி நீயே” (அகம். பா. 53)

என்னும் பாடல்வரிகளால் அறியலாம்.

தலைவி, தன்னைவிடப் பொருளைப் பெரிதாய் எண்ணிய தலைவனின் செயலை வெறுத்துக் கூறுவதும் தலைவன் தன் செலவைக் குறித்துச் சொன்னதுமே மிகவும் கலங்கிப் பேசமுடியாமல் தடுமாறி இறுதியில், திருந்துக மாதோ நும் செலவு என்று கூறுவதும் அவ்வாறு தடுத்தும் கேளாத தலைவன் அவளின் நிலையை எண்ணி வருந்தினாலும் பொருளின் தேவையால் ஈர்க்கப்பட்டுச் சென்றுவிடுவதை,

"எல்லையும் இரவும், வினைவயின் பிரிந்த

முன்னம், முன்உறுபு அடைய உள்ளிய

புதிமறந்து உறைதல் அரிது ஆகின்றே" (அகம். பா. 299)

என்னும் பாடல்வரிகள் உறுதிப்படுத்துகின்றன.

**உடன்போக்கு**

தகுதியைப் பார்த்து மணமகனைத் தேர்தெடுத்த கற்புச் சமூகத்தில் அதன் எதிர்விளைவாய் உடன்போக்கு நிகழ்ந்தது. உடன்போக்கு களவொழுக்கத்தின் முடிநிலையாயினும் கட்டுப்பாட்டின் மறுவினையாதலால் இங்கு கூறப்படுகிறது.

பெண்ணின் காதலை ஏற்றுக்கொள்ளாத பெற்றோர் வேற்றவர் வரைவுக்கு ஏற்பாடு செய்யும் நிலையில், தோழி தலைவியைத் தலைவனுடன் அனுப்பிவிடும் செய்தியும் அகநானூற்றில் இடம்பெறுகிறது.

"நனைவினை நறவின் தேறல் மாந்தி,

பனைவினை நல்இல் தருமணல் குவைஇ,

பொல்மல் ஓதி எம்மகள் மணன் என,

வதுவை அயர்ந்தனர் நமரே" (அகம். பா. 221)

என்ற பாடல்வரிகளால் அறியலாம்.

**திருமணம்**

"கற்பு என்ற கட்டுப்பாடு விதிக்கப்பட்ட காலத்தில் தோற்றம் பெற்ற ஒருதார மணமுறை, இயற்கையான நிலைமைகளை அடிப்படையாகக் கொள்ளாமல், பொருளாதார நிலைமைகளை அதாவது, ஆதிகால இயற்கையாக வளர்ந்த பொதுச் சொத்தின் மீது தனியுடைமை வெற்றி பெற்றிருந்த நிலைமைகளை அடிப்படையாகக் கொண்டு எழுந்த முதல் குடும்ப வடிவம் என்று எங்கெல்ஸ் விளக்குகிறார்."[11] "திருமணம் பொருளாதார வசதிக்காகச் செய்து கொள்ளப்படுவது என்பதை க. கிருட்டிணசாமியும் குறிப்பிடுகிறார்."[12] "ஒருத்திக்கு ஒருவன் என்ற கற்பு வாழ்க்கை நிலத்தைச் சொத்தாக மதிக்கும் சாதிகளில் காணப்படுவதை எடுத்துக் கூறும் அவர், ஒரு கணவர் மணம் என்பதே தவறாக ஒரு தாரமணம் என்று குறிப்பிடுவதாகவும் கூறுகிறார்."[13]

**பெற்றோர் இசைவு**

செல்வத் தகுதியும் குலமும் ஒத்து அமைகையில், பெற்றோரே மகள் விரும்பிய மணாளனை ஏற்றுக்கொண்டதற்கும் அகநானூற்றில் சான்றுள்ளது.

“மூவேறு தாரமும் ஒருங்குடன் கொண்டு,
சாந்தம் பொறைமரம் ஆக நறைகுர்
வேங்கைக் கண்ணியன் இழிதரு நாடற்கு
இன்தீம் பலவின் ஏர்கெழு செல்வத்து
எந்தையும் எதிர்ந்தனன், கொடையே, அலர்வாய்
. . . . . . . . . . . . . . . . . . . . . . . .
அம்பல் ஊரும் அவனொடு மொழியும்:
யாயும், அவனே என்னும்” (அகம். பா. 282)

என்னும் பாடல்வரிகள் தந்தை மகட்கொடை நேர்ந்ததும் தாய் உடன்பட்டதும் குறிப்பிடப்படுகின்றது. சாந்தம் பொறைமறமாக, இன்தீம் பலவின் ஏர்கெழு செல்வத்து என்ற தொடர்களால் தலைவியின் தந்தை, தலைவன் ஆகிய இருவருமே குறிஞ்சி நிலத்தவராதலும் மூவேறு தாரமும் ஒருங்குடன் கொண்டு வருதல் என்பதால் தலைவனின் செல்வத்தகுதியும் பெறப்படுகின்றன.

**பரத்தைமை**

“கற்பு பெண்ணை மட்டுமே அடிமைப்படுத்தியது என்பதைத் தெளிவுறுத்தும் வகையில் பரத்தைமை ஒழுக்கம் அமைகிறது. கணவனது பரத்தைமைக்காக மனைவி அவனை வெறுத்தொதுக்கினாள் என்ற செய்திக்கே தமிழிலக்கியத்தில் இடமில்லை என்பார் ந. சுப்புரெட்டியார்.”[14]

பரத்தைமையை வெறுத்தாலும் வெளிக்காட்ட இயலாத கட்டுநிலையில் அடிமை நிலையில் பெண்கள் வாழ்ந்ததால் வெளிப்படுத்த வாய்பில்லாது போயினும் குறிப்பால் உணரும் நிலையில் தலைவியரின் உள்ளக் குமுறல்களைப் புலவர்கள் உள்ளுறையில் அமைத்துப் பாடியுள்ளனர்.

“தெய்வம் அஞ்சல் புரையறம் தெளிதல்

என்று தொடங்கும் நூற்பாவிற்கு உரையெழுதிய இளம்பூரணர் புரையறம் என்பது பரத்தைமையைக் கண்டு புலவாது இதனைப் போற்றல் இல்லுறை மகளிர்க்கு இயல்பெனும் அறம்”[15] என்கிறார். அகநானூற்றிலும் புலக்கும் பெண்டிரை விலக்கி வைத்துவிடும் அளவிற்கு ஆடவர் செல்படுவர் என்பதையும் சமூகத்தில் அப்பெண்டியரின் நிலை மிகவும் தாழ்ந்துவிடும் என்பதையும் தோழி தலைவிக்கு எடுத்துக் கூறுவதை,

“பரத்தைமை தாங்கலோ, இலென் என வறிதுநீ

புலத்தல் ஒல்லுமோ?மனைகெழு மடந்தை!

அதுபுலந்து உறைதல் வல்லி யோரே,” (அகம். பா. 316)

என்ற பாடல்வரிகளால் உணரலாம்.

“பொதுமகளிர் முறையைக் கொண்டு தனது வாழ்க்கையை அணி செய்து கொண்டுள்ள கணவனுக்குப் பக்கத்திலேயே, புறக்கணிக்கப்பட்ட மனைவியும் நிற்பதை எங்கெல்ஸ் எடுத்துக்காட்டுகிறார்.”[16]

**மகப்பேறு**

கற்பு வாழ்வில் மகப்பேற்றிற்கு மதிப்பிருந்தது. ஆண்மக்கட்பேற்றையே அகப்பாடல்கள் குறிப்பிடுவதால், அக்காலச் சமூகம் ஆடவர்க்கே மதிப்பளித்தமை பெறப்படுகின்றது. அகநானூற்றில் முல்லை, பாலை, மருதப் பாடல்களில் புதல்வன் குறிக்கப்படுவதை,

“இம்மை உலகத்துஇசையொடும் விளங்கி,

மறுமைஉலகமும் மறு இன் எய்துப,

செறுநரும் விழையும் செயிர்தீர் காட்சிச்

சிறுவர்ப் பயந்த செம்மலோர் எனப்

பல்லோர் கூறிய பழமொழி எல்லாம்

வாயேஆகுதல் வாய்த்தனம் - தோழி!” (அகம். பா. 66)

என்னும் பாடல்வரிகள் ஆண்மக்கள் பேற்றுக்குச் சமூகத்தில் இருந்த பெருமையைத் தெளிவாகச் சுட்டிக்காட்டுகிறது.

**தொகுப்புரை**

தொல்காப்பியத்திலும் உரையாசிரியர் குறிப்புகளிலும் கற்பை நிகழ்த்தும் முறையும் கற்புகால நிகழ்வுகளும் குறிப்பிடப்படுகின்றதே அன்றிக் கற்புக்கான தெளிவான வரையறை கூறப்படவில்லை.

கற்பு என்பது ஆண்களின் மேலாதிக்கத்தால் பெண்கள் மீது திணிக்கப்பட்ட கட்டுப்பாடு என்பதை அகநானூற்றுச் சான்றுகள் வழியாகவும் புறச்சான்றுகள் வழியாகவும் விளக்கப்பட்டுள்ளது.

காதலித்தோரை வஞ்சித்தலும் மணந்தோரைக் கைவிடுதலும் போன்ற அவல நிலைகள் தழைத்தோங்கியதால் கரணச் சடங்குகள் தோன்றுவதற்கு அடிப்படையாய் அமைந்ததை இலக்கண, இலக்கிய சான்றுகள் விளக்கப்பட்டுள்ளது.

கற்பிற்குரிய பொருள் விளக்கம், கற்பு காலத்தில் வினைமுற்றி தலைவன் வர காலம் தாழ்த்தியதை எண்ணி தலைவி வருந்தும் நிலையும் தலைவி வருந்தும் நிலையைக் கண்டு தோழி ஆற்றுவிக்கும் முறையையும் உணரமுடிகிறது.

கணவனைப் பிரிந்திருக்கும் காலத்தில் பெண்கள் தங்கள் உணர்வுகளைக் கட்டுப்படுத்தி ஆற்றியிருத்தல் வேண்டும் என்றகட்டுப்பாடுகளைக் கடைப்பிடித்தலே கற்பு என்பதை வலியுறுத்தியும் கற்பு என்பது தெய்வத்தன்மை பொருந்தியது, நாணம் நிறைந்தது என்று விதிக்கப்பட்டிருந்ததை உணரமுடிகிறது.

திருமணத்திற்குப் பிறகு கணவன் பரத்தைமை ஒழுக்கத்தை மேற்கொண்டாலும் தலைவி அவனை வெறுத்து ஒதுக்கியது இல்லை என்பதை அறியமுடிகிறது.

**அடிக்குறிப்புகள்**

1. டாக்டர் மு. நீலாமணி, கலாதே தாக்கர் வர்த்தமானன் தமிழ், தமிழ் அகராதி, ப.331
2. வ.சுப. மாணிக்கம், தமிழ்க்காதல், ப.107
3. தொல். பொருள். கற். நூ.1
4. தொல். பொருள். செய். நூ.488
5. ஈ.கே. பாஸ்கரதாஸ், அகப்பொருள் பாடல்களில் தலைவி, பக்.43-44
6. மு. வரதாரசனார், முல்லைத்திணை, பக்.8-9
7. ந.சி. கந்தையாப்பிள்ளை, பெண்கள் உலகம், ப.83
8. மேலது, ப.118
9. சோ. இலக்குமிரதன் பாரதி, நமது சமூகம், பக்.153-154
10. தொல். பொருள். களவு. ப.22
11. எங்கெல்ஸ், குடும்பம் தனிச்சொத்து அரசு ஆகியவற்றின் தோற்றம், ப.106
12. சு. கிருட்டினசாமி, கூட்டமும் திருமணமும், ப.55
13. மேலது, ப.54
14. ந. சுப்புரெட்டியார், அகத்திணைக் கொள்கைகள், ப.268
15. இளம்பூரணர், (உ.ஆ),தொல்.பொருள். ப.389
16. எங்கெல்ஸ், குடும்பம் தனிச்சொத்து அரசு ஆகியவற்றின் தோற்றம், ப.106

**துணைநூல்**

1. பாலசுப்பிரமணியன். கு.வெ.(உ.ஆ)- அகநானூறு, தொகுதி –I, II
நீயூசெஞ்சுரி புக் ஹவுஸ்,
அம்பத்தூர்,
சென்னை – 600 098
முதற்பதிப்பு – ஏப்ரல் - 2004